

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வெள்ளிக்கிழமை 04-08-2023

# பழங்குடி உயிரைப் பறிப்போம்.. பத்ரி உரிமையைக் காப்போம்..

**இரண்டு மாதங்களைக் கடந்தும் எரிகிறது மணிப்பூர். அரசியல் அறுவடைக்காக மதவெறியைத் தூண்டிய பா.ஜ.க.வின் மாநில அரசும் ஒன்றிய பா.ஜ.க. அரசும் கைகட்டி வேடிக்கை பார்க்கின்றன. இதற்கு எதிராக லேசான கோபத்தை உச்சநீதிமன்றம் காட்டியதும், ஒரு பதிப்பக உரிமையாளரான பத்ரி சேஷாத்ரி என்பவர், உச்சநீதிமன்ற நீதிபதி கையில் துப்பாக்கியுடன் போக வேண்டியதுதானே என்று கொந்தளிக்கிறார். 'பழங்குடியின மக்களை அசிங்கப்படுத்திப் பேசுகிறார். நீதிமன்ற அவமதிப்பைவிட, வன்கொடுமையான பேச்சு அவரது பேச்சு. அத்தகைய மனிதாபிமானமற்ற – இரக்கமற்ற – சனாதனச் சங்கியை கைது செய்ததும் மனித உரிமை என்ற பெயரால் சிலர் கிளம்புகிறார்கள். சிலர் பாதிக்கப்படும் போது மட்டும் மனித உரிமையாளர்கள் 'வானத்தில் இருந்து குதித்துவிடுவார்கள்.' கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே அல்லவா?!**

ரத்த வெறி தாண்டவம் ஆடிக் கொண்டிருக்கிறது மணிப்பூரில். இரண்டு பெண்கள் ஆடைகள் களையப்பட்டு இழுத்து வரும் காட்சி என்பது இந்த மெத்தப்படித்த மேதைகள் காலம் காலமாகச் சொல்லி வரும் பூசனைப் பெண்களின் வடிவங்கள் அல்லவா? அதன் பிறகும் கொழுப்பு வாயில் வடிகிறது என்றால் – அதனையும் ஆதரிப்போம் என்றால், இங்கு சனாதனம் புத்திஜீவிகளுக்குள் போய் சங்கமம் ஆகி இருக்கிறது என்றல்லவா அர்த்தம்?

'ஒருவர் அறிவாளி என்பதன் பொருள், அவர் அந்தச் சமூகத்துக்கு, வாழும் காலத்தில் என்ன மாதிரியான தொண்டாற்றுகிறார் என்பதைப் பொறுத்தது' என்றார் அண்ணல் அம்பேத்கர். ஆடைகள் களைந்து இழுத்து வரப்பட்ட இரு பெண்களும் 'தி வயர்' இதழுக்கு அளித்த பேட்டியை எழுத்தாளர் தீபலட்சுமி மொழி பெயர்த்திருக்கிறார்.

"என் பெயர் நான்சி. 29 வயது. மே 4 அன்று என் கணவரும் மாமியாரும் கொல்லப்பட்டார்கள். திருமணமாகி ஐந்து மாதங்களே ஆகி இருந்தன. என் பெயர் கிம், 20 வயது. மணிப்பூர் இன அழிப்பில் தப்பியவர். என் அம்மா மற்றும் சகோதரர் பட்டப்பகலில் நடந்த படுகொலையை நேரில் கண்டவர். பெற்றோர் இருவரும் அரசுப்பணியில். தந்தை காவல்துறையில் பொறுப்பில் இருக்கிறார். ஆனால் இது நடந்த போது அவர் உடனில்லை. இன்று வரை அப்பாவைச் சந்திக்கவும் முடியவில்லை.

கலவரம் தொடங்கியது முதலே உறவினர்கள் எல்லாரும் ஒரே வீட்டில் கூடிக் கூடியே இருந்தோம். மே 4 அன்று எங்கள் இம்பால் வீட்டிலிருந்து எங்கள் சொந்த ஊருக்குப் போவதற்குப் பாதுகாப்பு கிடைப்பதாகக் கேள்விப்பட்டு துணிமணிகள் உடைமைகளை எடுத்துக் கொண்டு கிளம்பிய போது கும்பல் ஒன்று எங்களை நோக்கி வந்தது. நீங்கள் குக்கிகளா என்று கத்தியது. நாங்கள் மிஜோக்கள் என்றோம். குக்கி, மிஜோ எல்லாம் ஒன்றுதான் என்று கூறி எங்களைக் காரில் இருந்து வெளியே இழுத்தனர். காரை அடித்து நொறுக்கிய பின்பு கெரசின் ஊற்றிக் கொளுத்தினார்கள்.

என் அண்ணனை அடிக்கத் தொடங்கினர். நாங்கள் தடுக்க முயன்றோம். எங்கள் மீதும் அடி விழுந்தது. அந்தக் கும்பலில் ஒருவர் எங்களை அங்கிருந்த கடைக்குப் பின்னால் ஒரு வீட்டில் ஒளிந்து கொள்ளச் சொன்னார். நானும் அண்ணியும் அங்கு சென்று ஒளிந்து கொண்டு 112 எண்ணை அழைத்த போது அதனை யாரும் எடுக்கவில்லை. சற்று நேரத்துக்கெல்லாம் நாங்கள் அங்கு இருப்பதை அறிந்து வந்த கும்பல் கல்லால் வீட்டை அடிக்கத் தொடங்கியது. கதவை இரும்புக் கம்பிகள் கொண்டு அடித்து உடைக்கப் பார்த்தது. நாங்கள் கதவை அடைத்துத் தடுத்து நின்றோம். இரும்புக்கழிகளின் அடி எங்கள் மீது விழுந்து இரத்தம் வழியத் தொடங்கியது.

பின்பு எங்களை ஒருவரிடமிருந்து ஒருவர் பிரித்துவிட்டார்கள். என் முடியைப் பிடித்து இழுத்து மெயின் ரோட்டுக்கு அழைத்து வந்தார்கள். மொத்த நேரமும் கம்புகளால் அடித்தார்கள். ரோட்டில் அண்ணன் குருதி வழிய அமர்ந்திருந்தான். அவனிடம் ஓடிய போது அருகில் எனது அத்தை தனது ஒரு வயதுக் குழந்தையுடன் இருந்தார். அந்தக் குழந்தையையும் அடித்தார்கள்.

மெய்ரா பெய்பிக்கள் எவ்வளவு கெஞ்சினாலும் விடாமல் என்னை அடித்து, வயிற்றில் குத்தி, என் ஆடைகளையும் கிழித்தனர். சாலை ஓரத்தில் அமர வைத்து என்னை நோக்கிக் கத்தினார்கள். மெய்த்தி ஆண்களை நோக்கி, நான் உரிமை கொடுக்கிறேன், இவளை வன்புணர்வு செய்யுங்கள் என்று என்னைக் காண்பித்துச் சொன்னார். நான் அதிர்ச்சியடைந்து அழத்தொடங்கினேன்.

பிறகு அங்கிருந்த மெய்தி சமூகக்கூடத்துக்கு நடந்து போகச் சொன்னார்கள். நான் மெதுவாக நடந்து போனேன். உடல் முழுவதும் காயங்களின் வலி, நடக்கவே முடியவில்லை. அங்கு நுழையும் முன்பு என் ஆடைகளைக் கழற்றினார்கள். வீடியோவில் பார்த்திருப்பீர்கள். வயதான ஆண், பெண், எல்லாரும் இருந்தார்கள். அவர்கள் என்னை வசைபாடினார்கள். கும்பலில் இருந்தவர்கள் என்னைத் தொடர்ந்து அடித்தார்கள், உதைத்தார்கள்.

சமூகக் கூடத்துக்கு வந்த பிறகு திரும்பியும் புறப்பட்ட இடத்துக்கே நடந்து போகச் சொன்னார்கள். நான் திரும்பி மெதுவாக நடக்கத் தொடங்கினேன். அப்போது டி.சி. அலுவலகம் வழியில் இருந்தது. அங்கே செக்யூரிட்டி காவலர்கள் இருந்ததைப் பார்த்து அவர்களிடம் என்னைக் காப்பாற்றச் சொல்லிக் கேட்கலாம் என்று நின்றேன். எனக்கு உதவி செய்தால் கொன்று விடுவோம் என்று மிரட்டினார்கள். ஆகவே அவர்களும் உதவிக்கு வரவில்லை. அப்போது கும்பலில் இருந்த ஆண்களும் மெய்ரா பெய்பிக்களும் தடி கொண்டு தலையிலடித்தனர். எனக்கு மயக்கம் வந்து கீழே விழுந்தேன். இரண்டாவது முறை அடித்த போது நினைவிழந்து விட்டேன்" – என்று சொல்லி இருக்கிறார்கள் அந்தப் பெண்கள்.

இதைப் படித்த பிறகும் பத்ரியின் உரிமையைக் காப்பதுதான் முக்கியம் என்றால் பத்ரியின் உரிமை நிச்சயம் காக்கப்படத் தான் வேண்டும்.

**ஆடை களைந்து இழுத்து வந்தவர்களை விட ஆபத்தானவர்கள் இந்த உரிமை காப்பாளர்கள்!**

"எல்லாம் மரத்துப் போனதொரு மனநிலையில் இருக்கிறோம். இரவில் தூங்கவே முடியவில்லை. கண்ணை மூடினால் கொலைவெறிக் கும்பல் துரத்துவது போலக் கனவுகள் வருகின்றன. அதை நினைத்தாலே உடல் நடுங்குகிறது" என்கிறார்கள் அந்தப் பெண்கள்.

இதைப் படித்த பிறகும் பத்ரியின் வலது சாரிப் பேச்சுரிமையைக் காப்பதுதான் முக்கியம் என்றால் பத்ரியின் உரிமை நிச்சயம் காக்கப்படத்தான் வேண்டும். ஏனென்றால் இங்கே பேச்சுரிமையைப் பயன்படுத்துவதிலும் 'வர்ண' அடுக்கு இருக்கிறது!

தண்டனை தருவதில் கூட 'வர்ண' அடிப்படை இருந்த நாடு தானே இது!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (3.8.2023) சுதந்திர போராட்ட வீரர் தீரன் சின்னமலை அவர்களின் நினைவு நாளையொட்டி, சென்னை, கிண்டி, திரு.வி.க. தொழிற்பேட்டை வளாகத்தில் அமைந்துள்ள அவரது திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். உடன் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் திருமதி. என்.கயல்விழி செல்வராஜ், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் ககணபதி, ஏ.எம்.வி.பிரபாகர ராஜா, துணை மேயர் மு.மகேஷ் குமார், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப.ரங்கநாதன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் மருத்துவர் இரா.செல்வராஜ், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் த.மோகன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

### பேருந்துகளில் சி.சி.டி.வி. கேமராக்கள்!

# பெண்களுக்குப் பாதுகாப்பான சூழலை உருவாக்கியுள்ளது தமிழ்நாடு அரசு!

## பிரபல தெலுங்கு ஊடகம் ஏ.பி.என். நியூஸ் பாராட்டு

சென்னை, ஆக.4-

சென்னை மாநகர் போக்குவரத்துக் கழகத்தில் உள்ள ஒவ்வொரு பேருந்துகளிலும், சி.சி.டி.வி. கேமராக்களை அமைத்து பெண்களுக்கு பாதுகாப்பான சூழலை தமிழ்நாடு அரசு உருவாகியுள்ளதை பிரபல தெலுங்கு ஊடகமான ஏ.பி.என். நியூஸ் பாராட்டியுள்ளது.

நமது தமிழ்நாடு அரசு நிர்பயா திட்டத்தின் கீழ் பேருந்துகளில் பயணிக்கும் மகளிர் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், சுமார் ரூ.72.25 கோடி செலவில் 2500 பேருந்துகளில் CCTV கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளது. மாநகர் போக்குவரத்துக் கழகத்தில் உள்ள 2500 பேருந்துகளில் Mobile Network Video Recorder (MNVR) பொருத்தப்பட்டு, Video Management Software வாயிலாக மாநகர் போக்குவரத்துக் கழக தலைமையகத்தில் அமைக்கப்பட்டுள்ள ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தின் (Integrated Command & Control Centre) வாயிலாக கண்காணிக்கப்படுகிறது.

மேலும், பேருந்தில் பயணிக்கும் மகளிர், தங்களுக்கு ஏதேனும் அச்சுறுத்தல் மற்றும் அத்துமீறல் ஏற்படும் பட்சத்தில் உடனே பேருந்தில் பொருத்தப்பட்டுள்ள பொத்தானை (Panic Button) அழுத்துவதன் மூலம் அந்த தகவல் ஒருங்கிணைந்த கட்டுப்பாட்டு மையத்திற்கு அனுப்பப்பட்டு துரிதமாக நடவடிக்கை மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மாநகர் போக்குவரத்துக் கழகத்தில் உள்ள 66 பணிமனை /பேருந்து முனையங்களிலும் CCTV கேமராக்கள் பொருத்தப்பட்டு, இவற்றை இணையதளம் வாயிலாக Video Management Softwareல் கண்காணிக்கும் பணி தற்போது நடைபெற்று வருகிறது.

சென்னை மாநகர் போக்குவரத்து கழகத்தில் உள்ள ஒவ்வொரு பேருந்துகளிலும், சிசிடிவி கேமராக்களை அமைத்து பெண்களுக்கு பாதுகாப்பான சூழலை தமிழ்நாடு அரசு உருவாகியுள்ளதை பிரபல தெலுங்கு ஊடகமான ABN NEWS வெகுவாக பாராட்டியுள்ளது.

# கிராமங்களில் உள்ள அரசுப் பள்ளிகளில் தரமான கல்வி வழங்கப்படுகிறது!

## சட்டையப்பனூரில் மருத்துவ மாணவிக்கு நிதியுதவி வழங்கி அமைச்சர் ஐ.பெரியசாமி பெருமிதம்!

திண்டுக்கல், ஆக. 4-

புதுசத்திரம் ஊராட்சி சட்டையப்பனூர் அரசு பள்ளியில் பயின்று நீட் தேர்வில் தேர்வு பெற்ற மருத்துவக்கல்லூரி மாணவி சர்மிளாவுக்கு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி நிதியுதவி வழங்கினார். திராவிடமாடல் ஆட்சியில் கிராமங்களில் உள்ள அரசு பள்ளிகளில் தரமான கல்வி வழங்கப்படுகிறது என அமைச்சர் ஐ.பெரியசாமி பெருமிதமாக கூறினார்.

திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் சட்டமன்றத் தொகுதி தி.மு.க. உறுப்பினரும், தி.மு.க. மாநில துணைப்பொதுச்செயலாளரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி, ஆத்தூர் தொகுதி பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களைப் பெற்று தீர்வு வழங்கியதோடு, உடனடியாக சம்மந்தப்பட்ட அதிகாரிகளை தொடர்புகொண்டு நலத்திட்ட பணிகளை தொடங்க உத்தரவிட்டார்.

ரெட்டியார்சத்திரம் ஒன்றியம் புதுச்சத்திரம் ஊராட்சி சட்டையப்பனூரைச் சேர்ந்த வேல்முருகன் என்பவரது மகள் சர்மிளா முத்துநாயக்கன்பட்டி அரசுப்பள்ளியில் 12ம் வகுப்பு படித்து அதன்பின்பு நீட் தேர்வு எழுதி தேர்வு பெற்றார். மாணவி சர்மிளா



வுக்கு தூத்துக்குடி அரசு மருத்துவக்கல்லூரியில் இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாணவி மருத்துவகல்லூரிக்கு தேர்வு பெற்றது தெரிந்தவுடன் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ. பெரியசாமி தனது இல்லத்திற்கு நேரில் வரவழைத்து மாணவிக்கு நிதியுதவி வழங்கி வாழ்த்தினார்.

அப்போது பொதுமக்கள் மத்தியில் பேசிய ஊரகவளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி திராவிடமாடல் ஆட்சியின் நாயகன் கழகத்தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் நல்லாட்சியில் தமிழகம் முன்னேற்ற பாதையை நோக்கி சென்றுகொண்டிருக்கிறது. கிராமப்புறங்க ளில் உள்ள அரசு உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் தரமான கல்வி வழங்குவதால் கிராமப்புற மாணவிகளும் மருத்துவ படிப்பில் சேரும் நிலைமை உருவாகி வருகிறது என்றார்.

நிகழ்ச்சியின் போது திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக பொருளாளர் சத்தியமூர்த்தி, திருச்சி மாவட்ட ஊராட்சிகளின் உதவி இயக்குநர் கங்காதரணி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் தண்டபாணி, ஆத்தூர் நடராஜன், மாவட்ட ஊராட்சிகுழு தலைவர் பாஸ்கரன், ஒன்றிய செயலாளர்கள் திண்டுக்கல் நெடுஞ்செழியன், ரெட்டியார்சத்திரம் வடக்கு ஒன்றிய செயலாளர் மணி, ஆத்தூர் முருகேசன், தி.மு.க. நிர்வாகி அம்பை ரவி, அமைச்சரின் உதவியாளர் ஹரிஹரன், தி.மு.க. நிர்வாகிகள் மாவட்டத் தொண்டரணி துணை அமைப்பாளர் விவே கானந்தன், ஒன்றியக்குழு உறுப்பினர்கள் நாகலெட்சுமி ரமேஸ், காளீஸ்வரி மலைச்சாமி, மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி துணை அமைப்பாளர் பாறைப்பட்டி வாஞ்சிநாதன், ஒன்றிய தொண்டரணி அமைப்பாளர் பஞ்சம்பட்டி மணி, ஒன்றிய வர்த்தகர் அணி அமைப்பாளர் பொன்முருகன், திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர்கள், நெல்லை சுபாஷ், ஆனந்தன், மாவட்டப் பிரதிநிதிகள் இளங்கோ, எல்லை இராமகிருஷ்ணன், தி.மு.க. நிர்வாகி நந்தி நடராஜன் உட்பட தி.மு.க. நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.

### பேரா.சுப.வீரபாண்டியன் தலைமை! நா.எழிலன் எம்.எல்.ஏ.-கரு.பழனியப்பன் வாழ்த்துரை!

# திராவிட இயக்கத் தமிழர் பேரவை 'கருஞ்சட்டை' விருதுகள்!

## அமைச்சர் எ.வ.வேலு வழங்கி சிறப்புரை!

சென்னை, ஆக. 4-

திராவிட இயக்கத் தமிழர் பேரவை கருஞ்சட்டை விருதுகள் வழங்கும் விழா நாளை (5.8.2023 சனிக்கிழமை) மாலை 6 மணி முதல் இரவு 9 மணி வரை சென்னை, 735 அண்ணா சாலையில் உள்ள தேவநேயப் பாவாணர் நூலக அரங்கத்தில் நடைபெறுகிறது.

இவ்விழாவிற்கு பேரா. சுப. வீரபாண்டியன் தலைமை வகிக்கிறார்.

செல்வி சௌந்தர்ராஜன் வரவேற்புரையாற்றுகிறார்.

கயல் தினகரன், எழில் இளங்கோவன், ஆ.சிங்கராயர், பொள்ளாச்சி மா.உமாபதி, சிற்பி செல்வராசு, பி. புவேந்திரன், பெல்ராசன், லாரன்ஸ், அ.இல. ஜிந்தா, காசு. நாகராஜன், வேட சந்தூர் ரவிச்சந்திரன், இரா. உமா, மகாலட்சுமி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

நெல்லை பாபு தொகுப்புரையாற்றுகிறார்.

இவ்விருதுகளை திராவிடர் கழக பிரச்சார செயலாளர் வழக்கறிஞர் அருள்மொழி, தி.மு.க. இலக்கிய அணி தஞ்சை கூத்தரசன், திராவிட இயக்கத் தமிழர் பேரவை, தலைமைச் செயற்குழு உறுப்பினர் மு. மாறன் ஆகியோர் பெறுகின்றனர்.

இவ்விழாவில் பொதுப் பணி - நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் எ.வ.வேலு கலந்துகொண்டு கருஞ்சட்டை விருதுகளை வழங்கிச் சிறப்புரையாற்றுகிறார்.

விழாவில் சட்டமன்ற உறுப்பினர் நா.எழிலன் பாராட்டுரையும் திரைப்பட இயக்குநர் கரு. பழனியப்பன் வாழ்த்துரையும் ஆற்றுகின்றனர்.

ப.எட்வின் நன்றி கூறுகிறார்.



நேற்று முன்தினம் (02.08.2023) செங்கல்பட்டு திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம், மானாம்பதி ஊராட்சி ஒன்றியம், குயில்குப்பம் கிராமத்தில் ரோட்டரி கிளப் மெட்ராஸ் சென்ட்ரல் தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் மூலம் ரூ.7.50 கோடி மதிப்பீட்டில் இருளர் இன மக்களுக்காக கட்டி முடிக்கப்பட்டுள்ள 63 புதிய வீடுகளை மாவட்ட ஆட்சித் தலைவர் ஆ.ர.ராகுல் நாத் தலைமையில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் முன்னிலையில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார். உடன் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, திருப்போரூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எஸ்.பாலாஜி, முன்னாள் ரோட்டரி கிளப் மாவட்ட ஆளுநர் கலைமாமணி அபிராமி ராமநாதன், வேலூர் வி.ஐ.டி. பல்கலைக்கழக நிறுவனர் வேந்தர் கல்விக்கோ முனைவர் கோ.விஸ்வநாதன், முன்னாள் பன்னாட்டு ரோட்டரி கிளப் இயக்குநர் ஏ.எஸ்.வெங்கடேஷ், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.சுபா நந்தினி, ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.இந்துபாலா, தாம்பரம் மாநகராட்சி மேயர் திருமதி.வசந்தகுமாரி கமலக்கண்ணன், செங்கல்பட்டு மாவட்ட ஊராட்சி குழு தலைவர் திருமதி. செம்பருத்தி துர்கேஷ், திருப்போரூர் ஒன்றியக் குழு பெருந்தலைவர் எஸ்.ஆர்.எல்.இதயவர்மன், திருப்போரூர் ஆத்ம வேளாண்மைக் குழுத் தலைவர் பையனூர் எம்.சேகர், திருப்போரூர் ஒன்றியக் குழு துணைத்தலைவர் திருமதி.எஸ்.சத்யா சேகர் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.